**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 227 / 2023**

**வா.சா.1 – திருமுருகன்** 02.07.2026

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் சென்னையில் எல் அன்ட் டி நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் மேற்படி நிறுவனத்தில் கடந்த 5 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். தாவா சொத்து ஆதியில் எனது அப்பாவின் அப்பாவான முத்துவிஜயனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது அப்பாவிற்கு எப்படி பாத்தியமானது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி தெய்வேந்திரன் எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் உடன்பிறந்த மற்றொரு சகோதரர் பெயர் ராஜாங்கம் அவர் இறந்துவிட்டார். எனது தாத்தா முத்துவிஜயனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது அப்பா மற்றும் அவரது உடன்பிறந்த சகோதரர்களான தெய்வேந்திரன், ராஜாங்கம் ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பெயர் பிள்ளையார்கோவில் செய் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் தாவா சொத்து பிரதிவாதிக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பதில் எதிர்வழக்குரையில் எனது தந்தை காவல் துறையில் பணிபுரிந்ததால் எனது அம்மா பெயரில் தாவா சொத்தை 25.08.1997 கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 25.08.1997 கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால்

பார்த்துள்ளேன். மேற்படி ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அம்மா பெயருக்கு தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக கூறியுள்ள நிலையில் எனது அப்பாவிற்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் அது எனது அப்பாவிடம் தான் கேட்க வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட்டின் அசல் என்னிடம் தான் உள்ளது. வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் எழுதப்பட்ட போது நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் பக்கம் 3–ல் எனக்கு தனித்து பாத்தியமான சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது பத்தி 4 ல் எனது தகப்பனார் சேகருக்கு தாவா சொத்து பாத்தியமானது என்று சொல்லியுள்ளேன் எந்த வகையில் பாத்தியம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரின் கையொப்பம் எனக்கு பார்த்தால் தெரியும். <u>என்னிடம் காட்டப்படும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த எதிர்உரையில் உள்ள கையொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம் தான் அந்த கையொப்பம் பி.வா.சா.ஆ.1.</u> எனது தகப்பனார் பெயரில் தாவா சொத்திற்கு தவறாக ஏற்பட்ட பட்டாவை வைத்துக்கொண்டு உரிமை ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.7 தான செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் 31.08.2021ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பட்டா மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்பு ஏற்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பட்டா எனது தகப்பனார் பெயரில் தவறாக

ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 அடங்கல் சான்று 13.11.2023ல் ஏற்பட்டது என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணன் என்பவர் தாய்மாமா ஆவார் இராஜேஸ்வரி கோபாலகிருஷ்ணனின் மனைவி ஆவார். இராஜேஸ்கண்ணன் மேற்படி கோபாலகிருஷ்ணனின் மகன் ஆவார். வா.சா.ஆ.3 அடங்கல் சான்றில் ராஜேஸ்கண்ணன் விவசாயம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வா.சா.ஆ.4ல் ராஜேஸ்வரி விவசாயம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராதில் நான் விவசாயம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் கூலி கொடுத்து விவசாயம் செய்தேன். தாவா சொத்தில் நானோ, இரோஜஸ்கண்ணன், இராஜேஸ்வரியோ விவசாயம் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனது பெயரில் 4 லக்க சொத்துக்களுக்கு பட்டா உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி எனது தகப்பனார் பெயரில் 8 லக்க சொத்துக்களுக்கு பட்டா உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 வரி ரசீதுகள் தாவா சொத்துக்களுக்குரியது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.8 பட்டாக்கள் தவறாக ஏற்பட்ட பட்டாக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து பாகப்பிரிவினையின் மூலம் பிரதிவாதியின் பாகத்திற்கு 03.09.1980ல் கிடைக்கப்பெற்று பிரதிவாதி இன்று வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் குறிப்பிட்ட 25.08.1997 பதிவில்லா கிரைய ஆவணம்

எனது தகப்பனாரால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனாரோ, நானோ எந்த காலத்திலும் தாவா சொத்தை அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அத்தை மகள் பெயர் வள்ளிக்கொடி. 18.05.2009ல் தாவா சொத்தை பிரதிவாதி வள்ளிக்கொடிக்கு குத்தகைக்கு விட்டு அவர் சிறிது காலம் அனுபவம் செய்து வந்தார் என்றால் அது போலியான குத்தகை ஆவணம் ஆகும். தாவா சொத்து பிரதிவாதிக்கு தான் பாத்தியம் என்பதை பொறுத்து ராஜாங்கமும், எனது தகப்பனாரும் பிரதிவாதிக்கு 28.07.2005ல் ஒரு உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் அது மோசடியான ஆவணம் ஆகும். மேற்படி உறுதிமொழி பத்திரம் மற்றும் குத்தகை பத்திரத்தை நான் பார்த்ததில்லை. எனக்கு எனது தந்தை எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.7 இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது தகப்பனாரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். தாவா சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியம் என்றும் எனது அப்பாவிடமிருந்து எனது அம்மா கிரையம் வாங்கினார் என்றும் எனது பதில்வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்களை பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும் இந்த வழக்கை எனது அப்பா தான் நடத்தி வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல. நானோ, எனது தகப்பனாரோ தாவா சொத்தை எந்தக்காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு

கிடைக்கத்தக்கதல்ல என்றும் பிரதிவாதியின் எதிர்கோரிக்கை அனுமதிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை